Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ஞு புரட்டாதி மீ கசஉ வெள்ளிக்கிழமை (30 SEPT. 1955) [இல-உகூ]

# ஒலிபெருக்கியில் அருட் பாக்கள்

## ஆலயங்களில் அமைக்க உழைக்கும் கடமை

( உடுவில், திரு. நா சின்னத்தம்பி அவர்கள் )

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு (உதவுமா?) உதவாது" என்று கூறினால், அதற்கு நியாயங் கேட்கவோ — விளக்கம் கேட்கவோ யாரும் முன்வந்துவிடமாட்டார்கள். அது முழுதும் உண்மையானதொன்றாகும். அதுபோலவே ஒரு கருத்தைப் போதனையில் திரும்பத் திரும்பப் பிரசாரஞ் செய்துவிட்டு — திரும்பத் திரும்பப் பத்திரிகைகளில் எழுதிவிட்டு — திரும்பத் திரும்பச் சந்தர்ப்பம் வாய்த்த அமையங்களிலே பேசிவிட்டு — அவ்வளவில் அந்தக் கருத்தை நிறுத்திக் கொள்ளுவதும் அமைந்துவிடும் என்பதை எடுத்து விளக்கத் தேவையில்லை! அதற்காக எழுதும் பணியோ — பேசும் பணியோ நின்றுவிடவேண்டும் என்பது கருத்தல்ல! சமய வளர்ச்சிக்கு எழுத்துப்பணியும் — பேச்சுப்பணியும் மிக மிக அத்தியாவசியகம் வேண்டப்படுவனவாகும்.

ஆனால் அப்படி எழுதப்படும் கருத்துக்களோ — பேசப்படும் கருத்துக்களோ — போதனை என்ற அளவில் நின்றுவிடாது அக்கருத்துக்கள் அனைத்தும் சாதனையிலே மிளிரச் செய்ய வேண்டும். போதனை புரிபவர்களும் போதனையைக் கேட்பவர்களும் போதனைகள் சாதனையில் உருவாக்கப்படுதற்கு உழைக்கவேண்டும். சாதனையில் மிளிரச்செய்ய ஏற்ற வழிகளை வகுக்கவேண்டும். இதைவிடுத்து பத்திரிகைகளிலே கட்டுரைகளைத் தீட்டிவிட்டு வாளாவிருந்தால் சமயவளர்ச்சி ஏற்படுவது எப்படி?

சென்ற ஆவணி மாதம் 31ந் தேதி (16-9-55) வெள்ளிக்கிழமை வெளிவந்த "இந்து சாதன இதழில் "ஆலய வழிபாட்டு முறை" என்னும் தலையங்கத்துடன் தென்மயிலை அன்பர் திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் எழுதிய கருத்துக்களைக் கண்ணுற்றேன். அன்பர் அவர்கள் எழுதிய கருத்துக்கள் அத்தனையும் சைவமக்கள் சிந்தித்துக் கடைப்பிடித்தொழுகவேண்டியவைகளாகும். ஆனால் திரும்பத் திரும்ப எழுதுவதிலும — பத்திரிகைகளில் வெளிவந்த அளவில் திருப்தி கொண்டு செயலிலிறங்காதொழிவதையுமெண்ண உள்ளம உடைகின்றதே! "அர்ச்சகர்கள் பண வருவாயைப் பார்க்கிறார்கள்" என்று தொடங்கி ..... ..... ஒலிபெருக்கிகள் ஒருபால் முழங்குகின்றன, கடதாசி மாலைகளைச் சூட்டுகிறார்கள். ஓங்காரப் பொருளை விளக்கும் திருவாசியில் மின்சாரம் தொடுக்கிறார்கள் ........" என்றெல்லாம் அனேகமாக இன்று சைவ ஆலயங்களிலே நடைபெறும் ஆகாச் செயல்களை அகற்றி, சைவ ஆலயங்களிலே திருவிழாக்களைத் திருவிழாக்களாகத் திகழச் செய்யுங்கள் என்று எத்தனை தடவைகள் எத்தனை பத்திரிகைகளில் வேண்டுதல்கள் விட்டார்கள் சைவ அறிஞர்கள். பிரசாரங்கள் நடத்தினார்கள். அவர்கள் எல்லாம் எழுத்தளவில் நின்றார்களா? இன்றைய நிலையில் மேற்படி குறைகளை அகற்ற, எழுத்தளவில் நின்றுவிட்டால் போதுமா? இவற்றை நீக்க வேறு வழிகளில்லையா? உண்டேல் அவை யாவை? "இன்று சைவ ஆலயங்களிலே ஒலிபெருக்கிகள் முழங்குவது ஒரு நாகரீகமாக அமைந்து விட்டது. அதிகமாக, எந்த ஆலயத்திலும் விசேட விழாக்கள் நிகழும்போது ஒலிபெருக்கிகள் ஒலமிடுவது சகசமாக வந்துவிட்டது. நிலைமை இத்தகையதாக இருக்க, ஒலிபெருக்கிகள் சைவ ஆலயங்களிலே முழங்குவது ஆகாச் செயலாகும். இதைவிட்டொழியுங்கள் என்று, மக்களை, இக்கைங்கரியத்தில்முன் வந்துழைக்கச் செய்வது குதிரைக்கொம்பாகும். எனவே, புதுவழிகளைக் கொண்டு அன்பான முறையிலே இவற்றை அகற்றுதலே சாலவும் சிறந்த ஒன்றாகும்.

### சந்திரனைப் பிடித்து விளையாட முயன்றவாறு!

வானத்திலே 'வளர் மதி' ஒளிவீசியவண்ணம் திகழ்ந்தது; குழந்தையாயிருந்த இராமர் — சந்திரனோடு விளையாட விரும்பினார்; தமது இருகைகளையும் சந்திரனுக்கு நேரே நீட்டினார். விம்மி விம்மி அழுதார். அழுகையை ஆற்ற அன்னைர் முயன்றனர். குழந்தை நோயினால் அழுகிறது என்றனர் சிலர்; நித்திரைச் சோர்வால் அழுகின்றார் என்றனர் சிலர்; கோபத்தினால் அழுகின்றார் என்றார் சிலர் ஈற்றில், ஒரு கண்ணாடியிலே சந்திரனது நிழலைத் தோறச் செய்து, குழந்தையின் கையில் கொடுத்து அழுகையை ஆற்றியதாக ஒரு கதை! இதேபோல், இன்று சைவ

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### தமிழ் நாடு அருள்நெறித் திருக்கூட்டம்

அருள்நெறித் திருக்கூட்டத்தின் ஸ்தாபகர் — கிரநதாத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள ('குன்றக்குடி அடிகளார்') 30-9'-55ம் திகதி முதல் 14-10-'55ம திகதி வரை ஈழத் திருநாட்டில் சர்வோதயப்பயணம் செய்ய இருக்கின்றார்கள். சர்வோதயப் பணியுடன் அருள்நெறிப் பணியும் மேற்கொள்ள உள்ளார்கள் இலங்கை மத்திய அருள்நெறித் திருக்கூட்ட அமைப்பும அதன் போது தொடங்கி வைக்கப் பெறும். இந்தப் பணியை கொழும்பிலிருக்கும் திரு. கே. இராமச்சந்திரா அவர்களும் நீர்வேலியிலிருக்கும் அகில இலங்கைக் காந்திய சேவாசங்கப் பொதுக்காரியதரிசி திரு. சி. க. வேலாயுதம்பிள்ளை அவர்களும் மேற்கொண்டு தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். அருள்நெறி அன்பர்கள் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்து அருள் நெறிக்கு ஆக்கம் தர வேண்டுகிறோம் என்று தமிழ்நாடு அருள் நெறித் திருக்கூட்டத் தலைமை அலுவலகச் செயலாளர் அறிவித்திருக்கின்றார்.

### இரண்டாவது சர்வோதய மகாநாடு

பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் 30-9-55 தொடக்கம் நடக்கவிருக்கும் சர்வோதய மகாநாட்டை திருவண்ணாமலை ஆதீனம் மகா சந்நிதானம் குன்றக்குடி அடிகளார் தவப் பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் திறந்து வைக்க சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி இராமசாமிரெட்டியார் அவர்கள் தலைமை வகித்துத் தொடக்குவார். ஈழநாட்டு அறிஞர்களுடன் சர்வோதயம், திரு. எஸ் ஆர். சுப்பிரமணியம், (சோஷலிசம் ஆசிரியர் சென்னை) அவர்கள் பேச்சாளர்களுள் ஒருவராயமைவர்.

ஆசியல் வலை:

# பொருந்தாப் பொருத்தனைகளும் கட்சிக் கொள்கைகளும்!

## பாராளுமன்றம் புகும் முன்னணிக்கு யாரானலும் சரி!!

திருபண்டார நாயகவின் விடுதலைக்கட்சி ஒருமொழிக் கட்சி. Dr. பெரோராவின் சமசமாசக்கட்சி இருமொழிக் கட்சி. அடுத்த பொதுத்தேர்தலில் மொழியே முக்கியமான கொள்கை. அப்படியிருக்கவும ஒருமொழிக் கட்சியும் இருமொழிக் கட்சியும் ஒற்றுமை முன்னணி யமைக்கிறார்களாம! என்ன வேடிக்கை! என்ன விபரீதம்!!

இவ்வாறே Dr பெரோராவின சமசமாசக்கட்சியும் திரு பிலிப்பு குணவர்த்தினவின் கட்சியும மொழிக் கொள்கையில் வேற்றுமை மிகவுடையனவாய் இருக்கவும் தேர்தல் முன்னணிக்காராய்ந்து பார்க்கின்றார்களாம்!


தேர்தலே சீவியம், தேர்தலே செல்வாக்கு, தேர்தலே இம்மையிற் பயன் மறுமைக்கு வித்து என்ற விதமாகக் கொள்கைகளைத் தள்ளி வீசிவிட்டு யார் தோளிலோ எவர் முதுகிலோ ஏறி அந்தப் பாராளுமன்றம் சேர்ந்துவிடவேண்டும என்பது தான் இந்நாட்டு உயர்தர அரசியல் அறிஞர்களின் உண்மையான நோக்கமாய் இருப்பதை மக்கள மேலும் மேலும் அறிந்து வருகின்றார்கள். இந்தத் தலைவர்கள்தான் சனநாயகத்தைப் பற்றி இலக்கணமும இலக்கியமும் எடுத்துக்காட்டி சொற்பெருக்கும் கட்டுரையும் மக்களுக்கு உதவிய வண்ணமாய் இருக்கின்றார்கள். பொதுசனத்தின விதி யிதுதானு? தலைவர்கள் சொல்வதை எழுதுவதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளும் பொதுசனம் என்ற எண்ணம இந்தக் கட்சிக்காரரிடம் எழுந்துவிட்டது

ஆகவே விடுதலைக் கட்சியும் சமசமாசக் கட்சியும் பொதுவுடைமைக் கட்சியும் மொழிக் கொள்கை வேற்றுமை எவ்வாறுயினும ஐக்கிய தேசிபக் கட்சியை அகற்றி அரச ஆதிக்கத்தைக் கைப் பற்றுவதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றன என்பதை எடுத்துரைத்தல் வேண்டுங்கொல்?

### இவர் கேட்டார் அவர் சொன்னார்

பாராளுமன்றத்திலே இருந்தாற்போல் வட்டுக்கோட்டை அங்கத்தவர் மொழிக்கொள்கை பற்றி ஒரு கேள்வி கேட்டார். முதல் அமைச்சர் முகமலர்ந்து மறுமொழி இரண்டு என்று கூறினர். புராணப் போக்கிற் புகன்றால்

என்றலுமே மொழிஏது இவ் (ஈ)ழ நாட்டில்
எழுந்திடுமிவ் வாதமே தியம்பு வீரேல்
மன்றமணி மாமுதல்மெய் அமைச்சர் நீரே
வழுவாதே உமக்குதவி யாவே னென்ன
நின்றமொழி இரண்டவற்றைத் தேர்தல் வேண்டும்
நிகழ்வாதம் காய்ந்திடுக நெறியும் ஈதென்
றன்றெருநொக் குவிலரங்கிற் றந்தேன் என்று
அறுதியிட்டே யுரைசெய் தாங்குறுதி சொன்னர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ், மன்மத ஹூ புரட்டாதி மீ
கச உ வெள்ளிக்கிழமை

## சைவச் சால்பில் வளரும் சபை

புற்றீசல்கள் போலத் தோற்றிய அற்றைப்பொழுதிலேயே அற்றுப்போகும் சங்கங்கள் — வெளியீடுகள் போலாகாது அறுபத்தாறுண்டுகளாகத் திருவருட் பெருங்கருணையினற் செம்மையாகத் தொடர்ந்து நிலவிவரும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் இந்துசாதன ஆங்கில தமிழ் இதழ்களும் சைவத் தனிச் சால்பிலே வளர்ந்து வருகின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையே. இப்பொலிவுக்குக் காரணமாக இருப்பது இந்நிலையங்களின் குறிக்கோ வாகிய சைவத்தகைமைசால் தெய்வத் தொண்டேயாகும்.

தெய்வத்தொண்டாற்றிச் சைவமும் சால்புறவளர்த்த நீங்கா நெடும்புகழ் திருவிய நாவலர் பெருந்தகையார் காட்டிய நன்னெறியிலே நின்று நிலவும் சபையும் அவ்வழி யமைந்து இறைபணியாற்றி இலங்கும் இந்துசாதனம் ஆங்கிலம் தமிழ் இதழ்களும் சைவ உலகிற்கு இன்றியமையாத சாதனங்களாய் உழைத்து வருதலை நாம் பாராட்டுகின்றோம்.

ஆட்பலமும் பொருட் பொலிவும் இல்லாமையால் சபையின் வளர்ச்சி போதியதாயில்லை என்று சொல்லுவாருமுளர். தெய்வப் பணி அருட் பொலிவால் அமையப் பெறுவதால் ஆட்பலமும் பொருட்பொலிவும் இன்றியமையாத வேண்டப்படுவன வல்ல. வேலைக்காக வேலை செய்வதே பணியின் பண்பாடு. மத சங்கங்களும் வெளியீடுகளும் மாமை வாய்ப்பட்டுழலும் உலகினரால் உவந்தேற்கப்படாவெனினும், மதங்களும் போதனைகளும் என்றும் போற் பரவி வருதல் உண்மையே.

சைவநன் மக்கள் நல்லவண்ணம் வாழ்வதற்குத் தகுந்த சால்பு இந்நாட்டில் நன்கமைந்திடல்வேண்டும்; சைவத் தகைமை இது; சால்பு தழுவிய வாழ்வு இது என்று சொல்லாற் — செய்கையாற் காட்டி மக்கள் உய்ந்து ஈடேறுவதற்குரிய பணி செய்து வரும் சபையும் இந்துசாதனம் ஆங்கிலம் தமிழ் இதழ்களும் இன்னும் பன்மடங்கு ஆதரவு பெற்று வளர்ந்தோங்கி விளங்க இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.

முன்னெறியாகிய முதல்வன்
முக்கணன்
தன்னெறியேசர ணாதன்மமே
யந்நெறியேசென்றங்
கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே.

---

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

### இலங்கைத் தேசாதிபதிக்கு இன்னமும் இங்கிலாந்தில்..... ......

பொருட்காட்சித் திறப்புவிழா 1957 இல் நிகழவிருக்கின்றதாம். அவ்வமையம் இளவரசி மார்க்கரெட்டு வந்து சிறப்பித்தல் வேண்டும் என்று மாதேசாதிபதி அவர்கள் அழைப்பு விடுத்திருக்கின்றாராம். எவ்வகையிலும் அந்த ஆங்கிலேயர் தொடர்பை நிலைநாட்டி விடவேண்டும் என்ற கொள்கை யுள்ளவர்கள் இன்னும் பலர் உளர். ஆங்கில மொழியை இந்நாட்டில் அழியாது காப்பாற்றும் முயற்சியை இப்பொழுது சில கற்றாரிடம் காணலாம்.

### கரடிக் கூத்துக்குச் சிவ பூசையா?

சிவ பூசைக்குட் கரடி என்று ஒரு முதுமொழியுண்டு. நல்ல காரியங்கள் செய்யும்பொழுது விபரீதமான வேறு விஷயங்கள் புகுந்தால் இப்படிச்சொல்வார்கள். விபரீதமான வேலைகளுக்குள் ஒரு ஒவ்வாத நல்ல காரியத்தைச் செய்தால் அதைக் கரடிக் கூத்துக்குட் 'சிவ பூசை' என்றுதானே கூறுதல் வேண்டும்? இந்தவகையிலே பொதுவுடைமைக் கட்சியினர் தங்கள் கொள்கை மதமின்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், கடவுளிலும் வல்லமையுள்ளவன் கடவுளின் படைப்பாகிய மனிதன் என்ற விளக்கத்தை வேதமாகக் கொண்டிருப்பதையும் தேர்தலுக்காக ஒதுக்கி வைத்துவிட்டு மத சாதனை செய்து மக்களை மனம் திருப்பப் பகிரங்கப் பிரயத்தனம் செய்வது பகிடிக்கூத்தா........? அல்லது செப்படி வித்தையா?

### சுதந்தர இலங்கைக்குத் தூ,நேச சின்னங்களா......?

பொதுவுடைமைப் போர் வையாளர்களுக்குத் தாய் நாடு உருசியா. அரசியல் வேதம் மார்க்சுவின் மதிமொழிகள், கட்சியின் வர்ணம் — கொலையின் பயனாக ஒழுகும் உதிரத்தின் நிறம். கட்சிக்கொள்கை — அழித்தல். கட்சிச் சின்னம் — உருசிய அரிவாளும் ஆமாரும். இலங்கைப் பொதுவுடைமைவர் எல்லாரும் தலை வணங்காப் பரோபகாரிகள். ஆனால் அவர்கள் கீழ்ப்படிந்து நடப்பது உருசியாவுக்கு. பிறந்த நாட்டை மறந்து பிறநாட்டுக்காக உழைக்கும் பெரியவர்கள் .... .... .... !

x x x

மார்க்சு என்பாரும மற்றைய பொதுவுடைமையினரும் மதம் என்பது கூடாது, போதைப் பொருள் இது, எனக் கண்டனஞ் செய்து மக்களை நிரீச்சுரவாதிகளாக்கி வைத்தனர். ஆசியாவிலே பொதுவுடைமையை ஆதரிக்கும் சீனத்தலைவரும் அப்படியே கூறிவிட்டார், இருந்தும் இலங்கைப் பொதுவுடைமையினர் தேர்தல் இடைவேளைக்கு மட்டும் இறைவன் உண்டு, இறைவனை வழிபடுதல் வேண்டும் எனச் சொல்லுவதில் ஒரு நியாயம் உண்டு தான். வெற்றி வேண்டுமே எவ்வகையிலும் வெற்றி வேண்டுமே !!

---

# வேதாகம பயிற்சிக் கழகம் அவசியம் வேண்டும்

## சைவம் பரிபாலிக்கத் தகுந்த முறை இதுவே

ஸ்ரீ சி. பசுபதிச் செட்டியார்

உலகத்தில் இப்பொழுது வழங்கிவரும் முக்கியமான சமயங்களுள்ளே எங்கள் சைவசமயம் தோன்றி இத்தனை வருடமென்பது ஒருவருக்கும் தெரியாது. எப்பொழுது இந்தச் சிருட்டியாயிற்றோ அப்பொழுதே எங்கள் சைவசமய மூலசமய சாத்திரங்களாகிய வேதங்களும் ஆகமங்களும் வெளியாயின. மற்றைச் சமயங்கள் யாவும் அவ்வத் தேசங்களின் அரசர்கள், கோடீசுவரர் முதலானவர்களால் இனிது பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. ஆனல் எங்கள் சைவசமயத்தைப் பரிபாலிக்க அத்தகையோர் அதிக ஊக்கங் காட்டாமலிருந்தும் அது இவ்வளவு காலமும் நிலைபெற்று ஓங்கி நிற்கின்றமை தன்னுடைய உண்மைநிலையேயென்று சொல்லலாம்.

இனி மற்றைச் சமயங்களுக்கும் மதாசாரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சமயநூற் றுணிவு என்று எதைச் சொன்னார்களோ அதுவே அந்தச் சமயிகளெல்லாருக்கும் பிரமாணமாகும். அக்குருமார்கள் சமயபரிபாலனம் செய்தலையே தமக்கு வேலையாகக் கொண்டு அதனைச் செய்து வருகிறார்கள். அங்கே குருவானவர் ஒன்றை சொன்னால் அதை மிகவு கீழ்ப்படிவுடன் மற்றவர்கள் கேட்பார்கள். குருவுக்கு மிஞ்சினவர்கள் சமய விஷயத்தில் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம். இக்காலத்தில் எங்கள் குருமார், எங்கள் விருப்பத்திற்கிற் கிணங்க சூர்ணோற்சவம், அந்திரேஷ்டி, தீக்ஷை, பிரதிஷ்டை திருவிழா முதலிய கிரியைகளைச் செய்துவிட்டு தங்கள் வேதனம், தட்சணை முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு போவதேயொழிய சமயப் பிரசங்கம், சமய ஸ்தாபனம், சமய நூல்களை வெளிப்படுத்துவது முதலிய சற்கருமங்களைச் செய்யாதொழிகின்றனர்.

எங்கள் குருமாரிடத்தில் ஒரே வகையான கிரியை முறையில்லை. ஆங்கில வைத்தியர்கள் ஒரே இடத்தில் பத்துப்பேர் கூடினாலும் கலந்து வைத்தியஞ் செய்வர். ஆனல், தமிழ் வைத்தியர் இருவர் கூடினாலும் ஒரேவகையான வைத்தியமுறை இல்லாமையால் ஒத்து வைத்தியம் செய்யமாட்டார்கள் அதேபோல் எங்கள் குருமார்களும் ஒரே விதமான முறையிலலாதபடியால் ஒவ்வொரு கிரியையிலும் வித்தியாசக கொள்கையுடையராய் ஒத்துப்போவதில்லை. கற்றுத் தேர்ந்தவர்கள் அல்லாதவர்களைக் கொண்டு கிரியைகள் செய்விப்பதுமிகவுமதவறு. ஆகையால் ஒழுக்கமுடையவர்களாய் கல்வியறிவுடையவர்களாய், நல்ல கௌரவமுடையவர்களாய் ஒரே கிரியைமுறையுடையவர்களாய் யார் எதைக் கேட்டாலும் ஒரே வகையான விடை சொல்லத்தக்கவாறு தேர்ந்தவர்களாய் இருந்தாலன்றோ ஆசாரியர்களுக்குச் சிறப்பு. அவர்கள் சமயத்தையும் சமயக்கல்வியையும் பரிபாலித்தலிலே கண்ணுங் கருத்துமாக விருக்கவேண்டும். தற்காலத்தில் எங்கள் பிராமணர்கள் அநேகர் தங்கள்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

---

## தமிழ் ஐக்கிய முன்னணி

தமிழ் ஐக்கிய முன்னணியின் சார்பாக கூட்டமொன்று திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களின் இல்லத்தில் நடந்ததாம். திரு. சுந்தரலிங்கம் அவர்களுடன் திருவாளர்கள் ஜீ ஜீ. பொன்னம்பலம், எஸ் ஜே. வி. செல்வநாயகம், வைத்திய கலாநிதி இ எம். வி. நாகநாதன் ஆகியோர் சமூகமளித்துமொழிக்கொள்கை பற்றியே தேர்தலுக்கு முன்வருவதாகத் தீர்மானித்தார்களாம்

---

முன்னிதழ்த் தொடர்ச்சி

# மகா கவி காளிதாசரின் குமார சம்பவம்

தமிழாக்கம்
பரமேஸ்வரக்கழகம — ச இராமச்சந்திரன்

கையினுற் செயலின் றேனும் கவினணி கலனுய்க் கண்டோர்
மையலுகொண் மதுவன் றேனும மாலினை விளைப்பதாகிக்
கொய்தெறி மலரன் றேனும கொன்படை மதவேட் காகி
எய்துறு மிளமை தன்னின் எழில்பெற்றாள் இமயச் செல்வி (31

செங்கதிர் அலர்த்தலாலே சிறந்ததா மரைபோல் வண்ணம்
பொங்குதா ளிகையி னுலே பொலிந்தசித் திரமபோற் பொற்பார்
மங்கைதன் னங்க மெல்லாம் மலர்ந் தொளிர் பருவத்தாலே
எங்கு மேரெழிலை வீசி இலங்கின இன்ப மோங்க. (32)

பூதலந் தனிலே வந்து பொருந்தலாற் பொருந்தும் செம்மைப்
பாதவங் குலிக டம்மைப் பங்கயம பாரிலே யுண
டாதல செய் தலர்ந்தே எங்கு மற்புதத் தசையு மென்னும்
ஈதன்றி இமய நங்கை இணையடிக் கிணை யான துண்டோ (33)

சிமையமார் இமயச் செல்வி சிறடிச் சிலம்பி னோசை
அமைவறக் கற்பான் வேண்டு மார்வத்தா லாச வன்னம்
உமையவ டனக்குத் தான்றன் னுடையமென் னடையைக் கற்பித்
தமையினுற் போல அன்னு ளணிநடைக் கழகுற் றன்றே (34

வேறு

திரண்டுநல் லளவிற் சிறந்தழ கொழுகும் சேயிழை சீருறு தொடைகள்
இரண்டையும் படைத்த இரணிய கருப்பன் இயற்றுறு செயலினி லிதனை
[மேலை
மருண்டமா மேனுகன் வடிவழுக்கினை வகுத்திட மனங்கொளு மெண்ணம்
தெருண்டவன் செய்த செயலினிற் தெரிதல தோயாந் திகழ்ந்திலங்கியதே.
(தொடரும்) (35)

---

## அகில இலங்கைத் தமிழ்ச் சங்கம்

### மொழிப்பிரச்சனை மாநாடு

மேற்படி சங்க ஆதரவில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சங்கத்தலைவர் வித்துவான் வ மு. கனகசுந்தரம் அவர்கள் தலைமையில் புரட்டாதி 16 உ ஞாயிற்றுக்கிழமை (?-10-55) மாலை 4 மணிக்கு மொழிப் பிரச்சனை மாநாடு ஒன்று நடைபெறும். பல அறிஞர்கள் சமூகமளித்து இதிற் பங்குபற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரங்களுக்கு மூலமாயுள்ளது ஐந்தெழுத்து

—————0—0—————

## இடையருதோதுதல் இறிடா இன்பந் தரும்

(முற்றொடர்)

ஞானசம்பந்தப் பெருமான் மதுரையிலுள்ள திருமடத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் சமணர்கள் தங்கள் மந்திரத்தால் சிவநெறி வளர்க்க வந்த சம்பந்தப் பெருமானின் மடத்தில் செந் தீயைச் சேரச்செய்தார்கள். எல்லா மந்திரங்களுக்கும் மேலாகிய பஞ்சாட்சரத்தைச் செபிக்கிறவர்களின் நோக்கினுல் எட்டுத் திசைகளிலும் மற்றைய மந்திரங்கள் தொழிற்படா. ஆகையால் ஞானத்தின் திருவுருப் போன்றவரும் நான்மறையின் தனித்துணையுமாகிய ஞானசம்பந்தப் பெருமான் வசித்த திருமடத்தில் தாங்கள் செய்த சாதனைகள் தொழிற்படாத தன்மையைக் கண்டு சமணர்கள் தளர்ந்தார்கள்.

"மற்றுப் பற்றெனக்கின்றி நின்
திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிறவாத
தன்மை வந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்
கறையூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லு நா நமச்சிவாயவே"

என்று சுந்தரமூர்த்திநாயனுர் பாடியுள்ளார். "நான் மறக்கினுஞ் சொல்லு நா நமச்சிவாயவே' என்று ஒவ்வொரு பாட்டின் இறுதிதோறும் அப்பதிகத்தில் பாடியிருக்கிருர். ஒரு சமயம் பெருமானை மறந்தாலும் நா எப்பொழுதும் பஞ்சாட்சரத்தைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்று சுந்தரர் இறைவனை வேண்டுகிருர். "வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்........" என்று இன்னெரு தேவாரத்தில் கூறுகிருர். இடைமாருது பஞ்சாட்சரத்தை ஓதினுல் அப் பழக்கம் நிற்கும்பொழுதும் நடக்கும்பொழுதும் உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும வந்து சேரும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூன்று பெருமக்களைத்தவிர பெரிய புராணத்தில் கூறப்பட்ட அடியார்களின் சரித்திரங்களையும் எடுத்து ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் எல்லோரும் ஐந்தெழுத்தைப் பொன்னேபோற் போற்றி வாழ்ந்தார்கள்.

திலகவதி அம்மையார் அப்பர்சுவாமிகளைச் சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவத்திற்கு மாற்றுவதற்கும் அவருக்கடுத்த சூலைநோயை மாற்றுவதற்கும் நீற்றை ஐந்தெழுத்தோதி தம்பியாருக்கு உய்யுமாறு கொடுத்தார். "திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார்" என்பது புராணச் செய்யுளாகும்.

பிராமண குலத்திலே வந்து அவதாரம் செய்த முருகநாயனுர் பூக்களைப் பறித்து மாலைகளாகக் கட்டுவதுடன் திருவைந்தெழுத்தையும் இடைமாருது ஓதுவது அவரது பழக்கம் "பரமர் பதிகப் பற்ருன வோங்கிச் சிறந்த வஞ்செழுத்து ஓவா நாவினுணர்வினர்" என்பது சேக்கிழார் வாக்காகும்.

பெருமிழலைக் குறும்பநாயனுர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குருவாகக் கொ

ஆசிரியர்
திரு. செ. சின்னத்துரை B. A.

ண்டு அவரது பாதங்களை வழிபட்டது மாத்திரமல்ல திருவைந்தெழுத்தே உண்மைச் சுற்றமும் பொருளுமென ஓதி முத்தியின்பம் எய்தினுர். "முதல்வர் நாமத் தஞ்செழுத்துங் கேளும் பொருளும் உணர்வுமாய் வாய்ப்பக் கெழுமினுர்' என்று இப் பெரியாரின் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய நாயகியாகிய சங்கிலி நாச்சியாரும் பூத்தொடுத்து மாலையாகக் கட்டும்போதும் பஞ்சாட்சரத்தையும் செபிக்க மறந்தாரிலலை. அவரின் நா பஞ்சாட்சரத்தைச் சொல்லக் கைகள் அலர்கள் தொடுத்தன. "அன்பு நாரரவஞ் செழுத்து நெஞ்சொடுக்க வலர் தொடுத்தே" என்பது சேக்கிழார் சுவாமிகள் இவ்வம்மையாரைப் பற்றிக் கூறும் குறிப்பாகும்.

தண்டிகணுயனுர் ஓர் பிறவிக்குருடர். இவர் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார். புறநோக்கில்லாவிட்டாலும் பூர்வசென்மங்களில் செய்த தவ விசேடத்தினுல் அகநோக்குடையவர். திருவாரூர்ப் பூங்கோயிலை வலம் வந்து மெய்யன்போடு பஞ்சாட்சரத்தை உச்சரிக்கின்ற நியமம் பூண்டார். பஞ்சாட்சரத்தை இடையருது உச்சரித்த காரணத்தால் சமணர்கள் வெட்கி அவ்வூரை விட்டு ஓடும்படியாக திருவாரூர்க்குளத்தில் அப் பெரியார் மூழ்கி எழுந்தபொழுது அவரின் குருட்டுத்தன்மை நீங்கக் கண்ணுந் தனமை பெற்ருர். செம்மைபுரி நாவாலின்பமுறுங் காதனமச்சி வாய நற்பதமே — யோவா வன்பிலெடுத் தோதி யொரு நாள் போல வருநாளில்" என்று தண்டியடிகணுயனுர் புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. சோமாசிமாற நாயனுரும் சித்தம் தெளியப் பஞ்சாட்சர தியானம் செய்தார்.

"சித்தந் தெளியச் சிவனஞ்செழுத்
தோது வாய்மை
நித்தம் நியமமெனப் போற்று நெறி
யினின்ருர்"

என்று சேக்கிழார்சுவாமிகள் இவ்வடியாரைப்பற்றிக் கூறுவதை நோக்குக.

சிறப்புலிநாயனுரும் அஞ்செழுத் தோதும் நியமம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# அணிந்துரை அரங்கம்

## சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் பொருளாராய்ச்சி

(முதல் பகுதி)

ஆக்கியோன்: பல்கலைச் செல்வர் வித்துவான் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M. A. B. L. M. O. L. அவர்கள்.

இது தருமபுர ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாணைப்படி வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகளால் ஆவணிமூலத்திருநாள்நினைவு மலராய் வெளியிடப்பெற்றது. தருமபுர ஆதீனத்தின் 352-ம் வெளியீடு. சேக்கிழார்கண்ணப்பர் ஆகிய அடியார்களின் அருட் சிறப்புக்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்து அத்துறையில் நின்று பல திறச் சுவைகளை அறிஞர் சுவைக்குமாறு செப்புவது.

சைவத் தமிழ் வளர்ச்சிக்கு தருமை ஆதீனம் எந்தத் தருணத்தையும் இழக்கமாட்டாது என்பதற்கு உள்ள சிறந்த எடுத்துக் காட்டுகளுள் இவ் வெளியீடும் ஒன்ருய் இலங்குகின்றது.

## மகளுக்குச் சமஉரிமை

### இந்திய—சட்டத் திருத்தம்

இந்திய இந்து சமூகப் பொருளுரிமைச் சட்டத்தில் மகனுடன் மகளுக்குச் சமஉரிமை கொடுக்கும் ஒரு திருத்தம் செய்யப்படுகின்றது. இத்திருத்தத்தினுல் உரிமைப் பொருளில் மகளுக்கு மகனுடன் சம உரிமை உண்டாவதோடு அவர்களின் பிற்சந்ததியாருக்கும் சமஉரிமை உண்டாகின்றது

# சைவப் பண்பாடு

—————0—————

## யாழ்ப்பாணக் கமக்காரர் அனுட்டிக்கும் முறை

{ தென்மயிலை, திரு. செ. கோவிந்தசாமி }

நீற்றுக்குப் பல்லாண்டுகளாக யாழ்ப்பாணத்தின் ஒவ்வோர் கிராமத்திலும் வேளாண்மக்கள் தம்மரபுக்கேற்ப தமிழ்ச் செல்வமாகிய கமத்தொழிலை விருத்தி செய்து வருகின்றனர். இவர்கள் செய்கின்ற கமத்தொழிலிலும் சைவநெறி கடவுள்பக்தி முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இவர்கள் தங்கள் சிவநாடியாகக் கமத்தொழிலையே நம்பி வாழுகிருர்கள். இதனுல் இவர்கள் கமத தொழிலைச் செய்யும் பொழுதும் விநாயகப்பெருமானையே வேண்டுதல் செய்கிருர்கள். அதுவுமல்லாமல் சாங்களும் தங்கள் சுற்றமித்திரரும் ஆசாரசீலராய் விநாயகராலயத்திற்குச் சென்று பூசை முதலியன செய்து அகமகிழ்கிருர்கள்.

ஒரு காரியத்தைச் செய்யும்பொழுதும் நட்சத்திரம் நாள் முதலிய பலன்களின் படியே கருமத்தைச் செய்கின்றனர். எதைச் செய்யும்பொழுதும் இறைவனை நினைத்தே செய்கின்றனர். இதுவும் வைதீக முறையாகும். இதுமட்டா! கமத்தைப் பண்படுத்திப் புகையிலை நாற்று நடும்பொழுது பிள்ளையார் அறுகம்புல முதலியன வைத்துக் கர்ப்பூரம் கொழுத்தித் தேங்காய் உடைத்து தேவாரம் பாடி விநாயகரைத் துதித்தே காமத்தைச் செய்கின்றனர். இங்ஙனமே பண்டைய கமக்காரர்களும் சைவநெறியைப் பரப்பிக்கொண்டு வந்தனர். அவர்கள் அமாவாசை பௌர்ணிமை விரதங் காத்தல், வெள்ளிக்கிழமை விரதம், கந்தசஷ்டி விரதம், ஆடி அமாவாசை, மகா சிவராத்திரி விரதம், விநாயக சதுர்த்தி முதலிய விரதாதிகளையும் செவ்வனே கடைப்பிடித்தனர்.

தோட்டங்களிலே காலத்துக்குக்காலம் போகம்மாருமல் புகையிலை, சாமை, பயறு, குரக்கன், வாழை, கிழங்குவகை முதலிய பயிர்களையும் செவ்வனே செய்வார்கள். இப்பயிர்களை எல்லாம் பார்க்க மிக அழகாகவும் கண்கவர்காட்சி யுடையனவாகவும் இருக்கின்றன. ஆகவே இவ்வித வனப்பில தினை வகைப் பயிர்கள் எல்லாம் வளர்ந்து நிற்குங் காலத்தில் முருகப் பெருமான் வள்ளிநாயகியுடன் இங்குதான் வீற்றிருக்கின்ருரோவென நினைக்கலாம். இத்தகைய வனப்புமிக்க கம நிலமெல்லாம் பரிசுத்தமான நிலமாகவேயிருக்கின்றன. பரத்தரட்டையோடு போதல், ஆசௌசமுடையோராய்ப் போதல், மாதவிலக்குள்ள பெண்கள் போதல் ஆகிய இக் குற்றங்களைத் தோட்டங்களிலே செய்யத்தகாத குற்றங்களாக இன்றும் நம் கமக்காரர் அநுசரித்து வருகின்றனர்.

இன்னும் நெல் வயல்கள் உள்ள இடங்களிலுள்ள மக்களும் மேழி பிடித்தல், விதைஎறிதல், நாற்று நடுதல், புதிதெடுத்தல், அறுவடை செய்தல் முதலான காலங்களிலும் விநாயகப் பெருமானைப் போற்றி செய்தே தங்கருமத்தை ஆற்றுகின்றனர். இத்தன்மைகள் யாழ்ப்பாணச் சைவ சமயத்தின் தனிச் சிறப்புக்குரிய பண்டைய பண்பாடுகளாகும். இப் பண்பாட்டு மரபை நம் தமிழ் மக்கள் அழிந்து போகாதபடி பாதுகாத்து வரல் வேண்டும். நாகரீகமும், ஆங்கில மோகவும், விபரீத உணர்ச்சியும் கூடிய இக்காலத்தில் இவ்வித கிராமக் கமக்காரரின் பண்பாடுகள் விளங்குதல் யாழ்ப்பாணச் சைவ மக்களின் பண்பட்ட தூயவாழ்வைப் புலப்படுத்துகின்றது. ஆதலால் இவ்வித பண்பாடுகள் மென்மேலும் வளர எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டுவனூரில்
# சைவப்பிரசங்கம்

கட்டுவனூர்த்தண்ணீர்த்தாழ்வு ஞானவைரவசுவாமி ஆலயத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட்ட தினங்களாகிய 4—9—55 தொடக்கம் 13-9-55 வரையும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அவ்வமயம் திரு. வே. சங்கரப்பிள்ளை, திரு. இ. நமசிவாயம், திரு. செ. கோவிந்தசாமி, திரு. வ. முத்துக்குமாரு, திரு. நா. சிவசாமி, திரு. மூ. இராமலிங்கம், திரு. செ. சின்னத்துரை பி. ஏ., திரு. சீ. கணபதிப்பிள்ளை, திரு. பொ. சுந்தரசர்மா ஐயர், திருமா. குமாரசாமி முதலான சைவ உபாத்திமார்கள் முறையே சிறுத்தொண்டநாயனர், கண்ணப்பர், காரைக்காலம்மையார், திருநீலகண்டர், திருநாவுக்கரசு நாயனர், சம்பந்த சுவாமிகள், சேக்கிழார் பெருமான் முத்துத்தாண்டவர், அப்பரும் திலகவதியாரும், சிவபெருமான் விருத்தகுமாரரானமை என்னும் பொருள்கள்பற்றிப் பேசினர்கள். இவற்றையெல்லாம் செவ்வனே ஒழுங்குபடுத்திச் செய்தவர் சனசமூக ஊழியராகிய பெரியார் திரு க. பொன்னம்பலம் அவர்களாவர். இந்த மாதிரியான முறையை ஏனைய கிராமங்களும் பின்பற்ற வேண்டுமெனும் நோக்கத்தினலை இவ்வூர் சைவ இளைஞர்கள் கொண்ட கருத்தும் முயற்சியுமாகும். இதில் பல ஆடவர்களும் மகளிரும் பத்து நாளும வந்து பிரசங்கங்களைக் கேட்டார்கள்.

# மந்திரங்களுக்கு மூலமாயுள்ளது ஐந்தெழுத்து

3-ம் பக்கத்தொடர்ச்சி

பூண்டார். நேசநாயனர் அரனடியார்களுக்கு உடைகீளும்கோவணமும் நெய்து கொடுப்பதோடு அஞ்செழுத்தை ஓதுகிற நியமமும் பூண்டார்.

"ஆங்கவர் மனத்தின் செய்கை
யானடிப்போதுக் காக்கி
யோங்கிய வாக்கின் செய்கையுயர்ந்த
அஞ் செழுத்துக் காக்கி
தாங்கு கைத் தொழிலின் செய்கை
தம்பிரா னடியார்க் காகப்
பாங்குடை உடையுங் கீளும் பழு
தில் கோவணமும் நெய்வார்"

என்று நேசநாயனர் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுவதை உற்று நோக்குக.

சைவர்களாகிய எமக்கெல்லாம் சேக்கிழார்சுவாமிகள் பெரும் உபதேசம் செய்கிறர். நா பஞ்சாட்சரத்தை உச்சரிகக வேண்டும். எந் நிலையில் நின்றாலும் எக்கோலம்கொண்டாலும் மன்னியசீர் சங்கரன்ருள் மறவாமல் தேகம் உலக விஷயங்களில் ஈடுபட்டிருந்தாலும் நா பஞ்சாட்சரத்தை உச்சரிக்கிற உறுதியையும் பழக்கத்தையும் கொண்டுவரவேண்டும். "நாத்திகம்பேசி நாத்தழும் பேருமல்" நா பஞ்சாட்சரத்தை உச்சரித்துக கிடைத்தற்கரிய பேற்றை ஒருவர் பெறலாம். நாம் இவ்வுலக வாழ்வைவிட்டு உயிர் நீங்கும்பொழுதும் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும். நெடுங்காலப் பயிற்சியினலே உயிர்விடும்போது அப் பழக்கம் தவருமல் வரும். அந்நேரத்தில ஐந்தெழுத்தை ஓதும் வரத்தைத தரும்படி பட்டினத்தடிகள் கூறுவதை உற்று நோக்குக.

"ஐபுந்தொடர்ந்து விழியஞ் செருகி
யறி வழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோ
தொன்ற வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்
திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெ
ழுத் தோதவுங் கற்பியுமே"

பஞ்சாக்கரம் மலத்தைக் கெடுதது மெய்ஞானத்தைக் கொடுக்கும். பஞ்சாக்கரத்தைச் சிரத்தையோடு விதிப்படி செபிக்கிறவனுக்குத் தீய எண்ணங்கள் உண்டாகுமாயின் ஐந்தெழுத்தின் நினைவு உண்டாகும்; அந்த நினைவு தீய எண்ணத்தை ஓட்டிவிடும். திருவைந்தெழுத்து வழிக்குத் துணையாகும். நெடும் வழி போகும்போதும் பஞ்சாட்சரமே சிறந்த ஆயுதமாகும். புலி பாம்பு முதலிய தீங்கு செய்யும் பிராணிகளும் பஞ்சாட்சரம் செபிக்கிறவருக்குத் தீங்குசெய்யமாட்டா. ஆகாயம் வரைக்கும் விறகை அடுக்கி அதனுள் ஒரு சிறு நெருப்பை இட்டால் அத்தனை விறகும் எரிநது சாம்பராய்ப்போகும். அத்தன்மைபோல சென்ற பிறவிகளில் செய்த பாவங்களை நண்ணி நின்று அறுப்-து நமச்சிவாயவே. ஆணவமாகிய கடலை நீந்தச் செய்வதற்கு பஞ்சாட்சரம் தெப்பம்போன்றது. ஆகையால் இத்தகைய பெருமை வாய்ந்த பஞ்சாட்சரத்தை நாமெல்லாம் சிரத்தையோடும உறுதியோடும் சித்தம் தெளியச் செபிக்கின்ற பழக்கத்தை உடையவர்களாக வாழப்பழகவேண்டும்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர்
மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்
பது
வேத நான்கினும் மெய்ப்பொரு
ளாவது
நாதனும நமச்சிவாய வே"

### அகில இலங்கைப் பனை மகோற்சவம்

(உணவு உற்பத்திப் பகுதியார் சொல்வது)

2-10-55ல் அகில இலங்கையிலும் பனை விதைகளை நாட்டி, பனம் பொருட்களை உபயோகித்து, கிராமங்கள்தோறும் ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் நடாத்திப் பனை மகோற்சவத்தைக் கொண்டாடுங்கள்.

இயற்கை அளித்த செல்வம் பனை.

ஒரு ஏக்கர் செழிப்பான நிலத்துக்கு ஈடானவை 50 பனைகள்.

விரும்புவதெல்லாம் தருவது பனை.

பனையைப் போற்றி வளர்த்து உபயோகிப்பது சர்வோதயம்.

சுபீட்சத்துக்கும் செல்வத்திற்கும் பனையை வளருங்கள்.

### மதுவிலக்குப்பற்றி யாழ்ப்பாண நகரசபை

மதுவிலக்கு விசாரணைச் சபையாருக்கு எழுத்திலோ அல்லது நேர்முகமாகவோ மதுவிலக்குப்பற்றி எவ்வித கருத்தும் தெரிவிப்பதில்லையென்று யாழ்ப்பாணம் நகரசபையார் தீர்மானித்திருக்கின்றனராம்.

மதுவிலக்குக் கிளர்ச்சி தேர்தற் பிரசாரமேயன்றி உண்மையான தல்லவென்று சிலர் கருதுவது இவ்வாறு தீர்மானிப்பதற்கு ஏதுவாயிருக்கின்றதென்று கூறப்படுகின்றது.

### கொழும்பு தமிழ்க்கலாசாரச்சபை

கொழும்பு தமிழ்க் கலாசாரச் சபைக் கூட்டம் ஒன்று தலைவர் ஸ்ரீ சி. நாகலிங்கம் அவர்கள தலைமையில் நடைபெற்றது

அத்தருணம் ஆங்கில—தமிழ் சிங்கள அகராதி ஒன்று ஆக்குவதற்கு வழிவகை காணும்பொருட்டு ஓர் உபசபை நியமிக்கப்பட்டது. இலங்கையில் எங்கள் கருமங்கள் எல்லாவற்றிலும் தமிழ்மொழி ஆட்சி எவ்வாறிருக்க வேண்டும் என்று ஆராய்ந்து ஒரு பொதுக் கொள்கையைத் தீர்மானிக்கும் பொருட்டு தமிழ்மொழி பேசும் எல்லாப் பிரிவினரும் சேர்ந்த ஆலோசனைக் கூட்டமொன்றைச் சபையார் விரைவில் நடத்தவேண்டுமென்று வருடாந்தக் கூட்டத்தில் வைத்திய கலாநிதி குமாரரத்தினம் அவர்கள் பிரேரித்து ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டபிரேரணையைக் கையாளுதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்று சமர்ப்பிக்குமாறு மற்றொரு உப சபை நியமிக்கப்பெற்றது.

### கோவாபற்றி உரோமாபுரி நிகழ்ச்சி

கோவாவில் போர்த்துக்கேயர்செய்யும் அநீதிகளைக் கண்டித்து உரோமாபுரியில் இளைஞர்ஓர் பிரேரணை நிறைவேற்றிப் போர்த்துக்கேய அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளார்களாம். போர்த்துக்கேய தூதவர் காரியாலயத்திற்கு முன்பு தங்கள் எதிர்ப்பை நேர்முகமாகவும் தெரிவித்தார்களாம்.

### பொதுத் தேர்தல்

பொதுத்தேர்தல் 1956ம் ஆண்டு முற்பகுதியில் நடக்குமென்று செய்திகள் வெளிவந்தன. இவற்றை அறிந்த அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் 1956-ல் பொதுத் தேர்தல் நடப்பதை எதிர்க்கிறார்களாம். இந்த மனப்பான்மையின்படி உள்நாட்டு மந்திரி ஸ்ரீ ஏ இரத்தினாயக 1957-ம் ஆண்டுக்கு முன் பொதுத்தேர்தல் நடக்கமாட்டாதென்று சொல்லியிருக்கின்றார்.

### ஐ நா. பாதுகாப்புச்சபையில் இந்தியாவுக்கு இடம்

ஐக்கிய நாட்டுப் பாதுகாபபுச்சபையில் தேசிய சீனவின் இடத்துக்கு இந்தியாவை அமைக்க அமெரிக்கா விரும்பியதாம். ஆனல் தேசிய சீனவுக்கே அந்த இடம் அமைதல் முறையென்று கூறி பண்டித நேரு அவர்கள் அக் கருத்தை ஆதரிக்க மறுத்தாராம். தேசிய சீனவுக்கும் இந்தியாவுக்கும் இடங் கொடுக்கக்கூடியதாய் அங்கத்துவத்தொகையைக் கூட்டுதல் புத்தியென்று உருசியா கருதுவதாகக் கூறப்படுகின்றது.

### மும்மொழிப் பெயர்ப்பலகை

வீதிகளில் தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பெயர்ப் பலகைகள் அமைக்கவேண்டுமென்று யாழ்ப்பாண நகரசபை தீர்மானித்தது. யாழ்ப்பாண நூல்நிலைய உருவ அமைப்புப் பற்றி அக்கூட்டத்தில் கருத்து வேறுபாடுகள் காண வந்தனவாம்.

### வண்மேற்கு ஸ்ரீ விக்னேசப் பிள்ளையார் கோவில்

மேற்படி கோவில்பரிபாலன சபையின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் 18-9-55 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படிகோவில் மண்டபத்தில், திரு. அ. விசயரத்தினம் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. சென்ற பொதுக் கூட்ட அறிக்கை காரியதரிசியின் வருடாந்த அறிக்கை தனதிகாரியின் வருடாந்த வரவு செலவுக் கணக்குகள் முதலியன சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

காரியதரிசி தனது வருடாந்த அறிககையில் கோவில் நித்திய நைமித்திய பூசைகள் முதலியன விதிப்படி ஒழுங்காக நடைபெறுகின்றன என்பதைக் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பதினைந்து அங்கத்தவர்களைக்கொண்ட 1955 — 1956-ம் வருட நிர்வாகசபை தெரியப்பட்டது. உத்தியோகத்தர் தெவு பின்வருமாறு: தலைவர் திரு. அ. விசயரத்தினம், கௌரவ காரியதரிசி திரு. க. துரைசுவாமி, கோவில் அதிபரும் தனதிகாரியும் திரு. தி. செல்லத்துரை, பி. ஏ.

# விசை வண்டி (பஸ்) பணம்பெறும் முறை

விசைவண்டிப் பிரயாணிகளிடம் விசை வண்டித் தொழிலாளர் தாங்கள் நினைத்த முறையில் பணம் வாங்குவதுண்டு. தாங்கமாட்டாத வெயிற்சூடாயிருந்தாலென்ன பெரும மழையில் நனைந்தாலென்ன வண்டிக்குள் ஏறமுன்னரே பணம் கொடுக்க வேண்டுமென்று சில தொழிலாளர் அதிகாரத் தொனியோடு வற்புறுத்திப் பணம் வாங்குவது கண்கூடாகக் காணலாம். இதுபோன்ற வேறு பல நீதியில்லா நிகழ்ச்சிகளை நாள்தோறும் காணலாம்.

இவ்வாறு பணம் வாங்குதல் தண்டனைக்குரிய சட்டவிரோதமான செயல் என்பதையும் இத்தகைய குற்றச்சாட்டுகளைக் குறிப்பதற்குக் குறிப்புப் புததகம் பிரயாணிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதையும் யந்திர வண்டிப் போக்கு வரத்து உதவிக் காரியாதகாரி ஸ்ரீ பி. சங்கரப்பிள்ளை அவர்கள் பாணந்துறையில் நடந்த விசைவண்டிச் சங்கத்தார் கூட்டத்திலே பேசும்போது குறிப்பிட்டார். நின்று பிரயாணஞ்செய்தல் நிறுத்தப்படுவதோடு அறிவித்தற் பலகை நாட்டவேண்டுமென்றும் சட்டம் கூறுகின்றதாம். இவை யெல்லாம் வருகிற ஐப்பசி மாசம் தொடக்கம் நடைமுறையில் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசாமிப்பிள்ளை அவர்களுக்கு கொக்குவில் மக்களின் பாராட்டு

கொக்குவில் மேற்கு ஸ்ரீ. ஞானபண்டித வித்தியாசாலையில் சைவப் புலவர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்களுக்கு கொக்குவில் வாசிகளால் அன்னாரின் சஷ்டிஅப்தபூர்த்தி விழாவையொட்டி ஒரு பாராட்டுக் கூட்டம நடத்தப்பட்டது. புலவர் அவர்கள் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலிருந்து பேச்சாளர்களுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வித்தியாசாலைக்கு வந்தனும் திரு C. குமாரசாமி C. C. S. அவர்களின் தலைமையில் கூட்டம தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது. வரவேற்புப்பா ஆசிரியர் இராசையா அவர்களால் வாசித்து வழங்கப்பெற்றது தலைவர் அவர்கள் பிள்ளை அவர்களைப் பாராட்டுமுகமாகப் பண்டைக் காலப் புலவர்களைத் தமிழ் அரசர்கள் பாராட்டி ஆதரித்து வந்ததைப்போன்ற இவ் வரவேற்பு மிகவும் தகுதிவாய்ந்ததெனவும் சைவத்துக்கும் தமிழுக்கும பணிபுரிபவர்களை நாம கௌரவிக்கவேண்டியது நமது கடமை என்றும் அதனுல் ஆறுமுகநாவலர் அவர்களின் வழியில் பிள்ளை அவர்களும். கதாப்பிரசங்கம், புராணபடனம், உபந்நியாசம் முதலியவற்ருல் சைவத்தையும் தமிழையும் வளரச் செய்துகொண் டிருப்பதற்காக மொழிப்பிரச்சினை எழுந்துள்ள இவ்வேளையிலே இப்படிப்பட்ட பெரியார்கள் சேவையைப் பாராட்டுவதில் யான் பங்குபற்ற நேர்ந்தது மிகவும் சந்தோஷம் என்றும முன்னுரை நிகழ்த்தினுர். தலைமையுரை முடிந்ததும் திரு. வே. வல்லிபுரம அவர்களால் பொன்னுடை போர்க்கப்பெற்ற தலைவர் அவர்களால் பொற்கிழியும் புலவர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பண்டிதர் திரு.சோ.இளமுருகனுர், திரு. மு. சின்னத்தம்பி (BA, Hons) அவர்களும வழக்கறிஞரும் "இந்துசாதன"ப் பத்திராதிபருமாகிய திரு R N. சிவப்பிரகாசம் அவர்களும புலவர் அவர்களைப் பாராட்டிப் பேசினுர்கள். திரு. சிவப்பிரகாசம் அவர்கள் பேசுகையில் சுவைப் பொலிவு தாண்டவமாடிக் கொண்டிருக்கும் ஊரிலே வரவேற்பளித்தனர். குமாரசாமிப் புலவர்பரம்பரையிலே புலவரும் ஒருவராக இருக்கின்ருர். புலவரவர்கள் போன்றவர்களை ஆதரித்தால் தமிழுக்கும் சைவத்திற்கும் அழிவில்லை எனவும் சைவமும் தமிழும் வாழவேண்டுமானுல் வருங்காலச் சிருர்களுக்குத் தேவாரம் முதலியவற்றைப் பயிற்றுவித்துப் பல நூல்களை இயற்றித்தந்து எம்மைப் புலவர் அவர்கள ஊக்குவிக்க வேண்டுமென வும்குறிப்பிட்டார். திரு.S. இராமச்சந்திர ஐயர் B A. அவர்களும் திரு. M. R. காராளசிங்கம் J P. அவர்களும் தொடர்ந்து பாராட்டுரை வழங்கினுர்கள். திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் அன்புரை பின்பின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

## தமிழ் நாட்டுக்குத் தனி அரசு

தமிழ்நாட்டுக்குத் தனி அரசு, அதுபோலவே கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானுஎன்னும் தனி அரசுகள்எல்லாமாய் ஐந்து தனி அரசுகள் தென் இந்தியாவில் அமைக்கப்பெறுதல் வேண்டுமென்று இந்திய அரசாங்க புனரமைப்பு ஆராய்ச்சிச் சபையார் தீர்மானித் திருக்கின்றனராம்.

## பகிரங்க பரீட்சைகளில் தேசிய மொழிகள்

தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளும் பரீட்சைப் பாடங்களாகப் பகிரங்க பரீட்சைகளில் மாணவர் எடுப்பதற்கு வித்தியாதிகாரி ஒழுங்கு செய்கின்ருராம். தலைமை ஆசிரியர் சங்கத்தாரால் இது விரும்பத்தக்கதென்று முன்னர் எடுத்துக் காட்டப்பட்டது.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## பொருள் மலைவு

ஸ்ரீமத். சிவபாதசுந்தரமவர்கள் எழுதிவிட்டிறந்த குளோரீஸ் ஒப் சைவைஸ்ம் (Glories of Sivaism) என்ற நூல் அச்சாகிவிட்டது சந்தோஷம். அங்கு 12-ம் 38-ம பக்கங்களில் (இறைவனே உலகவின் பங்களுக்காகப் பூசிப்பது வீண் வேலை. காலத்தை வீணுக்குவதுமாகும். ஊழின்படி வருவதே வரும், என்ற பொருள்பட எழுதியிருக்கிருர்.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' 'கற்றதனலாயபயன் என்கொல்' 'குணடையூர்....செல்லுப் பெறறேன்... ஊிலே...... அலைவ அட்டித்தரப்பணியே' என்று நஞ் சமயப்பெரியோர் சொல்லக் கேட்டுப் பெற்றிருக்கிருர்கள். சென்ற சென்ற திருக் கோயில் வழிபாடே முயற்சியாகச் செய்துமிருக்கிருர்கள். இதில் எது சரியென்று, சைவக் கருததைக் கூறி மலைவு தீர்ததருள வேண்டுகினறேன்.

இங்ஙனம்,
குமரன்
வணணை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி சப்பிரமணியர் பொனனம்பலம் —வழக்காளி

இல. 11856

எதிராக

கோப்பாய் தெற்கு
கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11856ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணிகள் 1955ஆம் ஐப்பசி மீ 27 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கபபடும்

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 7628/=ம் இதில் ரூபா 6000/— சகு 28-10-54 திகதி தொடககம் 17 2-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 12 வீதவட்டியும் அதன் பின்முழுத் தொகைக்கும் 17-2-55 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீதமான வட்டியும கோட்டுச்செலவும்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று இருபாலை இறை திருப்டணியர் திடலும் மறு பிரிவுகளுமகிலைப்பரப்பு20குழி8 5/8 கிணறு தென்னைகள் பயிர்வகைகளும், எல்லை வடக்கு வயிரவி மகன் நாகமுத்துவின் உருமைக்காரரும் அம்பலவாண சுவாமி கோயிலாதனமும், கிழக்கு வயிரவி மகன் நாகமுத்துவின உருமைக்காரரும் கந்தையா செல்லநாதரும் உருமைக்காரரும், மேற்கு வாய்க்கால தெறகு எதிரியினுதனம் இதடங்கலும.

2. ஷை கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் தெறகிறை ஓடைவளவு கிலைப்பரப்பு 13½ யும் பயிர் வகைகளும் தென்னைகளும் கிணறும் எல்லை கிழக்கு சிவகுமாரசூரியர் பெண் தையல்நாயகம வடக்கும் மேற்கும் எதிரியும் மறுபேரும் தெற்கு கதிரவேலு பாலசிங்கம் இதடங்கலும்.

3 ஷை கோப்பாய் தெற்கிறை மூட்டியான் திலைவயல் பரப்பு 8, எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு ஆறுமுகம் பொன்னுவின் உருமைக்காரர் மேற்கு ஈசான பண்டாரசுவாமி கோயிலுக்குரிய தருமநிலம் தெற்கு நல்லைநாதசுவாமி கோயிலுக்குரிய வாதனம் இதடங்கலும.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்.

சாவகச்சேரி
25—9—1955.
M. 136 30—9—55 (ரூ 50)

## வேத பாராயணம்

ஐயா!

26 - 9 - 55 திங்கட்கிழமை ஸ்ரீ. வெங்கடேசப் பெருமான் இரதோற்சவத்தில் வேதபாராயணம் வெகு விமரிசையாய் சுமார் 30பிராமணக்குருக்கள் மாரறம் செய்யப்பெற்றது. இதைக் கண்டவர் பலர் ஏனைய பிரபல ஸ்தலங்களிலும் இப்படி நடப்பதை விரும்பினுர்கள். இப்படி நடக்குமென்று உங்கள் பததிரிகை மூலமாக வெளியிட் டிருந்ததும இந்த வைபவத்திறகு உதவியாயிருந்தது.

ஷை ஷேத்திர கர்த்தாக்கள் முறைப்படி வரவேற்று உபசாரணை செய்ததுமன்றித் தூரவிடங்களிலிருந்து வந்தவர்களுக்குப் பிரயாணச் செலவு கொடுத்துதவியும் எல்லாருக்கும் தெட்சணை கொடுத்து வணங்கி உற்சாகப்படுத்தியும் ஆதரித்தவிதமும் பாராட்டத்தக்கது; ஏனைய தர்மகர்த்தாக்களும் இப்படி உதவிபுரிய முன்வருவார்களாகில் வேத பாராயணம் யாழ்ப்பாணமெங்கணும் நிலைக்குமென்பது திண்ணம்.

குமரன்,
வண்ணை.

## எல்லைப்புற காந்தி விடுதலை

எல்லைப்புற காந்தி என்றழைக்கப்படும் கான் அப்துல்காபர்கான் அவர்கள் திடீரென விடுதலை செய்யப்பெற்ருர். எதிர்பாராத முறையில் அவர் கராச்சிக்கு வந்தாராம். அது பலர் மனங்களில் பலவித எண்ணங்களை உண்டாக்கியது. ஆனுல் தமது சகோதரர் கலாநிதி கான் சாகிப் அவர்களைக் காணும் பொருட்டே அவர் வந்தார் என்று அவர் வருகைக்குக் காரணம் கூறப்பட்டது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 2—10—55 —— 8—10—55

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய வியாபாரக் கருமங்களில் அதிகம் நல்ல பலனைத் தரக்கூடியதாயிருக்கின்றது. இந்த வாரம் நீர் உம்மோடு போட்டியிடுவோரை வெல்லக்கூடியதா யிருக்கும். நண்பரும் இனத்தவர்களும் உமக்கு அதிக உதவியாயிருப்பர், ஆனுல் வார இறுதியில் சில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். உம்முடைய கடன்களிற் சிலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும் சில நல்ல மாறறங்களுக்கு மிடமுண்டு. ஆனுல் மனச்சமாதானமிராது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை,புனர்பூசம 1,2,3**

இந்தவாரம் முழுதும் உம்முடைய மனம் அமைதியாயிருக்க மாட்டாது. பண நெருக்கடியில் சிறிது ஆறுதல் உண்டாகக்கூடுமேயானுலும் விசேட கருமங்களை ஒழுங்கு செய்வதில நீர் வருத்தப்படுவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம பாதம் பூசம் ஆயிலியம்.**

புது முயற்சிகளுக்கு நல்லவாரம். தனலாபமும் பகைவரை வெல்லுதலும நிச்சயம். நீர் அதிகம் புகழ் பெறுவீர், சமூக சித்தியும் வழக்கு வெற்றியும் நிச்சயம்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் சண்டை தொடுக்க முந்தவீர். முதல்நாள் கவனமாய்க் கழிக்கவேண்டும் உத்தியோகத் துறையில் நல்லவாரம். ஆனுல் உமக்கு மனச் சமாதானமிருக்க மாட்டாது.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

உம்முடைய இனத்தவர்கள் சிலருடன் இந்தவாரம் நீர் யோசிக்க வேண்டி வரும். திங்கள் செவ்வாயும் புதன் காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும. வாரமிகுதி உத்தியோக கருமங்களுக்கு நல்லாயிருக்கும்.

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம பாதம**

புதுமுயற்சிகளுக்கு இது ஒருநல்ல வாரம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக. பகைவர் அழிவுக்கு மிடமுண்டு. வாரத்தின் பின் அரையில் சில சுகவீனங்களுக்குமிடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம, கேட்டை.**

நடைமுறை ஒழுங்கில் சில மாற்றங்கள் இந்தவாரம் உம்மை அதிகம் வருத்தும் வேலை முன்னரிலும் கூடியதாயிருக்கும். இனத்தவர்கள் உமக்குச் சிறிது [illegible] டுவார்கள். வார இறுதி [illegible] னமாய்க் கழிக்கவும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

பணத்துறையில் ஒருநல்லவாரம். நீர் இழந்தவையாகக் கருதியபொருள்களைத் திருப்பிப் பெறுவீர். விநோத காரியத்தில் வெற்றியும் புகழும நிச்சயம்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

உம்முடைய கருமங்கள் எல்லாவற்றிலும் இந்த வாரம் கவனமாயிருக்கவும். சில நண்பர் நீர் அவர்கள்மேல் வைத்திருந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக்கூடும் குடும்பச் சூழலில் அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

ஒருநல்ல வாரம். உம்முடைய தொந்தரவுகளுட் பல நீங்கக் காண்பீர் சில பகுதிகளில் எதிர்ப்புக்கிடமுண்டு. ஆனுல் நீர் வெற்றியுடன் விளங்குவீர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்த வாரம் எந்த ஒரு முயற்சியிலும் நீர் ஈடுபடவேண்டாம். கண் [illegible] களும் [illegible] நல்லாயிருக்கமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவா விடுதலை செய்யப்படும்

—நேரு.

ஒறிசா மாகாணத்தில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்காலான சேதத்தை நேரிற் பார்க்கும்படி சென்ற பண்டித நேரு அவர்கள் அங்கே பேசும்போது கோவா விடுதலை செய்யப்படுதற்கு வேண்டியன எல்லாம் நேரத்திற் செய்யப்படும் என்று உறுதியாகக் கூறினூராம்.

## வேதாகம பயிற்சிக்கழகம் அவசியம் வேண்டும்

—0—

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

வருவாயை உத்தேசித்தோ அல்லது தம்மை ஆதரிப்பார்கள் வருகிறார்கள் என்ற எண்ணத்தாலோ வெவ்வேறு துறைகளில் இறங்க ஆரம்பித்துவிட்டார்கள். உத்தியோகம் வியாபாரம் முதலிய துறைகளில் பொருளீட்டலாமென்னும் நம்பிக்கையுடன் அத்துறைகளுக்குச் செல்கிறார்கள்- பூசை, புரோகிதம் முதலியவற்றால் தாம் சீவியம் செய்ய முடியாது என்ற எண்ணத்தாற்போலும் தாம் பரம்பரையாகக் கையாண்டு வந்த பிராமணத்தொழிலைக் குறைத்து வருகிறார்கள். இதைப் பார்க்குமிடத்து அடுத்த சந்ததியில் சமயக் கல்வி கற்றபிராமணரே இல்லாத திவசம், மாகாளையம் முதலிய சற்கிரியைகள் யாதும் செய்வது கஷ்டமாக வரும் போலத் தோன்றுகிறது.

ஆகவே சைவ சமயிகளாயுள்ள நாங்களனைவரும் கூடிய சிரத்தையெடுத்து குருமார்களின் பிள்ளைகளை எங்கள் சைவப் பள்ளிக்கூடங்களிலோ, அல்லது அவர்களுக்கென வேறு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியோ அவர்கட்கு வேண்டிய அன்னம், வஸ்திரம், பணம் முதலிய வசதிகள் செய்து அவர்களை நன்றாகக் கற்பித்தல்வேண்டும். சமயபாடம் தேவார பாராயணம், வேதாத்தியனம் முதலியவற்றை நன்கு கற்பித்து அவர்கள் படிப்புக்கேற்ப தராதரப் பத்திரம் வழங்கி அதற்கேற்ப வேதனமமுதலிய வருவாய்கள் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் வேண்டும். இவை இப்பொழுதே செய்யவேண்டும்.

இவ் விஷயத்தில் சைவ பரிபாலனசபையுடன் மற்றும் சைவஸ்தாபனங்கள், ஆலய கருத்தாக்கள், மடாதிபதிகள், செல்வர்கள் யாவரும் முன்வந்து ஒரு மத்திய ஸ்தாபனம் கூட்டி, அதில் வேண்டிய பொருள் சேர்த்து இம்மகா பெரும் கைங்கரியத்தை நடாத்தி வருவார்களாயின் எங்கள் சமயம் மேலோங்கி விளங்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. கோண்டாவில மேற்கு
   1 சிவப்பிரகாசம் திருநாவுக்கரசுவும் பெண்
   2 துரைரத்தினமும்

—வழக்காளிகள்

இல. 11455.

எதிராக

1 வண்ணார்பண்ணை கிழக்கு சம்பு கந்தையாவும்,
2 ஷை கந்தையா மகன் ஞானம்பிகையும்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11455 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955-ம் வூ கார்த்திகை மீ 5 வ- சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை வெட்டுகுளத்திலோடை'' நெற்பரப்பு 31ம் அதைச் சேர்ந்தவைகளும் எல்லைகிழக்குமேற்கும் தெற்கும் வாய்க்கால். வடக்கு நாகப்பர் இராமுப்பிள்ளை யினுதனம் இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்.
27—9—55.

M 135 30-9-55. (ரூ 200)

## தமிழ் பேசும் காரியதரிசி

திருக்கோணமலை நகரசபைக்குத் தமிழ் பேசும் காரியதரிசி ஒருவரை நியமிக்கும்படி திருக்கோணமலை நகரசபை ஓர் பிரேரணை நிறைவேற்றியிருக்கின்றது.

## பிழை திருத்தம்

12'38ம் இலக்கம் 1. இராமலிங்கம் நாகரத்தினமும், 2 பெண் சின்னம்மாவும் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு கோப்பாய் தெற்கு

—வழக்காளிகள்

யாழ்ப்பாணம் ராட்ஸ் ரோட்டு (Taffs Rd) சோனகதெரு அசனா மரக்காயர் கச்சமுகம்மது.

—எதிராளி.

என்ற கோட்டு விற்பனவு விளம்பரத்தில முதலாம் பந்தியில் பிற்பகல் என்பதற்குப் பின் '4 மணி தொடக்கம்' என்பது சேர்த்து வாசிக்கவு'.

தா. செல்லையா,
கொமிஷனர்.
No 37 Colombogam Road
Chundikuli Jaffna

## ஒலிபெருக்கியில் அருட்பாக்கள்

1-ம் பக்கத்தொடர்ச்சி

ஆலயங்களிலே ஒலிபெருக்கிகள் முழங்குவதைத் தடுக்க முயல்வதிலும் ஒரு சுலபமான புது வழியைக் கைடாண்டால், வெற்றிபெறுவது நிச்சயமாகும். ஆலயங்களிலே ஒலிபெருக்கிகள் முழங்கட்டும்! அதையிட்டுக் கவலை வேண்டாம்!! ஆனால் அந்த ஒலிபெருக்கிகளிலே, சினிமா இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பப் படுவதைநிறுத்தி "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆநந்தமாய தேனினைச் சொரியும தீந்தமிழ்த் தேவார, திருவாசகங்களையும், அருட்பாடல்களையும், திறமையான வித்துவான்களைக் கொண்டு, பண்ணுடன் பாடச்செய்து, அவற்றையெல்லாம் ஒலிப்பதிவாக்கி — அந்த இசைத்தட்டுக்களைக் குறைந்த விலையிலே — மிகமிகக் குறைந்த விலையிலே ஒலிபெருக்கிகள வாடகைக்கு விடுவோருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். சைவச் சபைகள் — சமயத் தொண்டர்கள் இதற்கு ஆவன செய்யவேண்டும்

### மருட்பாடல்கள் நீங்கி அருட்பா ஒலிக்கட்டும்!

சைவ ஆலயங்களிலே, திருவிழாக்கள் நிகழும் காலங்களிலே, ஒலி பெருக்கிகள் அமைக்கப்பட்டால், அங்கே அருட் பாடல்கள், கூட்டுப் பிரார்த்தனைகள் முழங்கட்டும்!

அதனால் வழிபட வரும் மக்கள உள்ளங்கள் ஒரு நிலைப்பட்டுச் சில நிமிடங்களேனும் அரனை எண்ண வாய்ப்பு ஏற்படட்டும்! அதைவிடுத்து, ஆலயங்களிலே அருவருக்கத்தக்க பாடல்கள் — தெந்தனுப் பாடல்களையொழிக்க— "பெண்களை நம்பாதே, ஊைகளே, பெண்களை நம்பாதே" என்றும், "ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப் பார்க்கிறார் .... .... ...." என்றும் அலறாமல் — அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே...! எனறு, அகங்குழைந்து, மெய்மறக்கச்செய்யும் அருட்பாடல்கள் ஒலிபெருக்கிகளால் ஆண்டவனை எண்ண ஆர்வம் எழாதா......? பக்தியுணர்ச்சி பாயாதா......? தன்னையே மறக்கும் நிலை ஏற்படாதா....? எனவே, சைவம் வளர்க்கும் சபைகள் — சங்கங்கள் அருட்பாடல்களையும்—தேவார திருவாசகங்களையும், இசைத் தட்டுகளாக்கி இலவசமாகவோ மிகக் குறைந்த விலையிலோ கிடைக்கச் செய்தால் — சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாகும். இதுபோன்ற சிறந்தபணியை — பயனுள்ள பணியைச் செய்வதற்குச் சைவ அபிமானிகளும் — சைவ ஆலயங்களிலே ஒலிபெருக்கிகள் முழங்குகின்றனவே! எனறு கவலையுறும் அன்பர்களும் முன்வந்து உழைப்பார்களாக, வாழ்க சிவதொண்டர்கள்! வளர்க சைவப் பணி!! சுபம்,

உ
சிவமயம்

# சைவ பரிபாலன சபை
## யாழ்ப்பாணம்

### 67-வது வருடாந்தக் கூட்டம்

மேற்படி சபையின் 67-வது வருடாந்தக் கூட்டம் நிகழும் மன்மத வூ புரட்டாதி மீ ௧௬ உ (2-10-55 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9½ மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1 தேவாரம்
2 சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு
3 காரியதரிசியின் வருடாந்த அறிக்கை
4 சைவ பரிபாலன சபையினதும் சைவப்பிரகாச யந்திரசாலையினதும் பரிசோதிக்கப் பெற்ற 1954—55-ம் ஆண்டுக் கணக்குகள் வாசித்தல்
5 A பிரிவுக்கு நிருவாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்
6 புது வருடத்திற்குரிய சபை உத்தியோகத்தரைத் தெரிவு செய்தல்
7 கோயிலாக்கண்டி சிவன்கோவிலின் பராமரிப்பைச் சபையார் ஏற்றுக்கொள்ளும் விஷயத்தை ஆலோசித்தல்
8 பிரேரணைகள்:—
   (i) இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் தமிழும் சிங்களமும் சம அந்தஸ்துள்ள அரசகரும மொழிகளாக உபயோகப்படுமாறு அரசியல் அமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தம் இனியாயினும் காலதாமசமின்றிச் செய்யும்படி இச் சபை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றது. — பிரேரிப்பவர்: முதலியார் C. முத்துத்தம்பி
   (ii) பத்திரிகையையும்
   (iii) சபையையும் பற்றிய பிரேரணைகள் — பிரேரிபவர்: திரு. ச. தியாகராசா
9 வேறு விஷயம்
10 நன்றியுரை

ஆ. தனபாலசிங்கம்
கௌரவ காரியதரிசி

யாழ்ப்பாணம்,
22—9—55.

குறிப்பு: (a) அங்கத்துவத்துக்குரிய சந்தாப் பணத்தைப் பாக்கியின்றிக் கட்டாதவருக்கு வாக்குரிமையில்லை. ஆகையால் அங்கத்தவர்கள் யாவரும் தங்கள் சந்தாவைக் கூட்டத்திற்கு முன் அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.
கணக்குச் சம்பந்தமான வினாக்கள் இருந்தால் 26-9-55க்கு முன் அவைகளை [illegible]
(b) இவ்வறிவித்தலில் [illegible] 16—9—55 ல் அனுப்பியது) திருத்தப்படுகின்றது.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
6,63,3,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
நிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


Printed and Published by S P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday September, 30 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org